செ. கு. எண்:152 நாள்: 11.10.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 11.10.2017

**1.** தேனி மாவட்டம், **மஞ்சளாறு நீர்தேக்கத்திலிருந்து** பழைய ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடும்படி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மாவட்டம், **மஞ்சளாறு நீர்தேக்கத்திலிருந்து** பழைய ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல் போக சாகுபடிக்காக 15.10.2017 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள **5,259 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

**2.** தேனி மாவட்டம், **சோத்துப்பாறை நீர்தேக்கத்திலிருந்து** பழைய நன்செய் நிலங்களுக்கும், புதிய புன்செய் நிலங்களுக்கும் பாசனத்திற்காகவும் மற்றும் பெரியகுளம் நகராட்சி குடிநீர் தேவைக்கும் தண்ணீர் திறந்து விடும்படி, தேனி மாவட்ட வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மாவட்டம், **சோத்துப்பாறை நீர்தேக்கத்திலிருந்து** பழைய நன்செய் நிலங்களுக்கும், புதிய புன்செய் நிலங்களுக்கும் பாசனத்திற்காகவும் மற்றும் பெரியகுளம் நகராட்சி குடிநீர் தேவைக்கும் 15.10.2017 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டத்தில் உள்ள **2,865 ஏக்கர்** நிலங்களின் பாசன தேவையும் மற்றும் பெரியகுளம் நகராட்சி குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**